# உம் சிறகுகள் நிழலில் என்நாளும்

உம்  சிறகுகள் நிழலில் என்நாளும் என்னை அரவணைத்திடு இறைவா-(2 )
அந்த இருளிலும் ஒளிசுடரும்
வெண்தணலிலும் மனங்குளிரும்  - ( 2 )
உந்தன் கண்களின் இமைபோல்
எந்நாளும் என்னைக் காத்திடு என் இறைவா

( உம் சிறகுகள் )

பாவங்கள் சுமையாய் இருந்தும் - உன்
மன்னிப்பில் பனிபோல்க் கரையும்  - ( 2 )
கருணையின் மழையில் நனைந்தால் -உன்
ஆலயம் புனிதம் அருளும்      - ( 2 )

( உம் சிறகுகள் )

வலையினில் விழுகின்ற பறவை – அன்று
இழந்தது அழகிய சிறகை      - ( 2 )
வானதன் அருள்மழை பொழிந்தே - நீ
வளர்த்திடு அன்பதன் உறவை

( உம் சிறகுகள் )